C.C 378/2013

PW 5

பெயர் சீனிவாசன் , த/பெ.கிருஷ்ணசாமி

தேதி 13.08.2024

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த தேதியில் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் 2000 ம் ஆண்டில் சரஸ்மணி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்துதான் வாங்கினோம். எங்களது கிரைய பத்திரத்தில் 1996, 1998 ஆவணங்கள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். எங்களது கிரையத்திற்கு முன்பு 1999 ஆண்டு முருகேசன் பெயரில் அதே சொத்திற்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். முருகேசன் பெயரில் பட்டா ரத்து செய்யபட்ட பின்பு அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல் முறையீடு செய்தார் என்றும் அதில் பிறப்பபிக்கப்ட்ட உத்தரவுதான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் உரிமையியல் வழக்கு எண் 288/2001 நிலுவையில் இருப்பதால் எந்த முடிவும் எடுக்க முடியாது என்றும் எனவே முருகேசன் தாக்கல் செய்த மேல் முறையீடு தள்ளுபடி செய்வதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும், மேற்படி உத்தரவில் OS 288/2001 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை ரத்து செய்ய தாக்கல் செய்த IA No.334/2002 மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருப்பதாக காட்டப்பட்டள்ளது என்றால் சரிதான். எங்களது கிரைய பத்திரத்தை தவிர முதல் விசாரணையில் கூறியுள்ள மற்ற ஆவணங்களை சந்திரகலா சரஸ்மணி ஆகியோர் மேற்படி ஆவணம் குறித்து எங்களிடம் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி முன் வில்லங்கங்களை அவர்கள் சொல்லியிருந்தால் நாங்கள் கிரையம் பெற்றிருக்கமாட்டோம் என்றால் சரிதான். எங்களது கிரைய பத்திரத்திற்கு முன்பு ஏற்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய நாங்கள் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறோம். அவ்வாறு நடவடிக்கை எடுத்தால்தான் மேற்கூறிய ஆவணங்களின் செல்லும் தன்மையை நிரூபிக்க முடியும் என்றால் சரிதான். எங்களது கிரையத்திற்கு முன்பு யார் யார் எந்ததெந்த தேதிகளில் சொத்தின் எந்ததெந்த பகுதி

பொறுத்து என்னென்ன வில்லங்கங்கள் செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதேபோல் எங்களது கிரையத்திற்கு பின்பு ஆவணங்கள் குறித்தும் தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்கள். நிலத்தை உழுவது சம்மந்தமாக தகராறு ஏற்பட்டபோது போலிசார் வந்து விசாரித்தார்கள். எந்த காலத்தில் என்ன விவசாயம் பார்த்தோம் என்பது குறித்து அடங்கல் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்து எங்களது அனுபவத்தில் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நாளது வரை என்ன என்ன உரிமையியல் வழக்குகள் எங்கு நிலுவையில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், தெரியும் ஆனால் முழுவதுமாக தெரியாது, ஒரு வழக்குதான் தெரியும். முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய் என்றாலும், நான் மிகப் பெரிய கோடீஸ்வரர் என்பதால் எதிரிகளை மிரட்டி சொத்தை பெறவேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.